உலகப் பொதுமறை

# வள்ளுவம்

தொகுதி–1




தொகுப்பாசிரியர்

**உடையார்கோயில் குணா**

பதிப்பாசிரியர்கள்

கலாநிதி **க.சுதாகர்**

பேராசிரியர், முனைவர் **கி.விசாக ரூபன்.**

கலாநிதி **கே.ரீ.கணேசலிங்கம்**

**சி.சூரியகுமார்**

**சி.நிரோசன்**

**உலகத் திருக்குறள் மாநாடு - 2020**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**

---

உள்ளத்தனையது உயர்வு

**தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு-19**

# நூல் விவரம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | உலகப் பொதுமறை வள்ளுவம் (தொகுதி–1)<br>(உலகத் திருக்குறள் மாநாட்டு கருத்தரங்கம்) |
| தொகுப்பாசிரியர் | : | **உடையார்கோயில் குணா.** |
| துணை பதிப்பாசிரியர்கள் | : | கலாநிதி **க.சுதாகர்**<br>பேராசிரியர், முனைவர் **கி.விசாக ரூபன்.**<br>கலாநிதி **கே.ரீ.கணேசலிங்கம்**<br>**சி.சூரியகுமார்**<br>**சி.நிரோசன்** |
| மொழி | : | தமிழ், ஆங்கிலம் |
| உரிமை–வெளியீடு | : | தமிழ்த்தாய் அறக்கட்டளை<br>மாரியம்மன் கோவில்,<br>தஞ்சாவூர்–613 501.<br>கைபேசி: 9443938797, 7530002454. |
| அளவு | : | டெம்மி |
| பக்கங்கள் | : | 12+350=362 |
| விலை | : | ரூ.250/– |
| ISBN | : | **978-81-909877-5-2** |
| நூல் வடிவமைப்பு | : | பரிதி பதிப்பகம்,<br>சோலையார்பேட்டை.<br>வேலூர் மாவட்டம்.<br>கைபேசி: 8098908840, 7200693200 |

# திருக்குறளில் கோன்மை

**சாந்தினி அருளானந்தம்**
முதுநிலை விரிவுரையாளர்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.
mathushanthini@yahoo.com

**23**

## ஆய்வுச்சுருக்கம்

பண்டைக்காலத்திலிருந்து மக்களை காக்கின்ற அல்லது வழிப்படுத்துகின்ற ஓர் நிறுவனமாக அரசுகள் இருந்துள்ளன. சில வலிமை பெற்ற அரசுகள் சிறு சிறு அரசுகளையும், பிறவற்றையும் தம்மரசுக்குள் உள்வாங்கிப் பேரரசுகளாக உருவாக்கம் பெற்றிருந்தன. அரசுகளின் உருவாக்கம், இவற்றின் கடமைகள், போர் நடவடிக்கைகள் என்பவற்றை அறியத்தரும் சான்றுகளில் கி.மு3ஆம் நூற்றாண்டுக்குரிய அர்த்தசாஸ்திரம், மற்றும் மனுஸ்மிருதி, சுக்கிரநீதி போன்றன பண்டைய கால அரசுகள் பற்றியும், ஆட்சி முறைகள் குறித்தும் அறியத் தருகின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரை சங்க இலக்கியங்கள் அக்கால ஆட்சியாளர்கள், அவர்களது போர்த்திறம் பற்றி சில செய்திகளைத் தருகின்றன. ஆனால் அவை அக்கால அரசியல் தத்துவம், கோட்பாடுகள், பற்றி மிகக்குறைவான செய்திகளையே அறிய உதவுகின்றன. ஆயினும் சங்க மருவிய காலத்துக்குரியதாகக் கருதப்படும் திருக்குறளில் ஒரளவுக்கு அக்காலத் தமிழகத்து அரசியல் பற்றி அறிய முடிகின்றது. திருக்குறளில் நல்லாட்சியைப் பற்றியும் கொடுங்கோல் ஆட்சி பற்றியும் சில அதிகாரங்களில் வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாகக் கோன்மை என்ற சொல்லாட்சியின் பின்னணியில் திருக்குறளில் தரப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. வள்ளுவர் நோக்கில் கோன்மையானது செங்கோன்மை, கொடுங்கோன்மை என இரு வகைப்படுத்தப்படுகின்றது. செங்கோன்மையைப் பற்றி பொருட்பாலில் ஆங்காங்கே குறிப்பிட்டாலும் செங்கோன்மை என்ற அதிகாரத்தில் விரிவான கருத்துக்களை முன்வைத்துள்ளதைக்

காணலாம். கொடுங்கோன்மை என்ற அதிகாரத்தின் ஊடாக எவ்வாறான ஆட்சியை ஆட்சியாளன் மேற்கொள்ளக் கூடாதென்பதைச் சுட்டிக்காட்டுகின்றார். கொடுங்கோன்மையின் தீவிரத்தைப் புலப்படுத்தும் வகையில் வெருவந்த செய்யாமை என்ற அதிகாரத்தையும் தந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. இவற்றின் பின்னணியில் அக்காலக் கோன்மை பற்றிய கருத்துக்கள் இவ்வாய்வில் முன்வைக்கப்படுகின்றது.

**திறவுச் சொற்கள்: கோன், அரசியல், வள்ளுவர், ஆட்சி, நீதி**

திருக்குறள் காட்டும் பல்வேறு பொருண்மைகளுள் அரசு, அரசன் என்பவை அரசியல் என்ற அதிகாரத்தின் கீழ் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலினுள் பொருட்பாலில் உள்ள அரசியல் என்னும் இயலினுள் செங்கோன்மை, கொடுங்கோன்மை என்ற அதிகாரங்கள் இடம்பெறுகின்றன. திருக்குறளில் காணப்படும் பொருட்பாலில் அரசியல் என்ற இயலினுள் அரசன், அரசு குறித்துக் காணப்படுகின்றன. இறைமாட்சி அதிகாரத்தில் படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் போன்றவற்றை அரசனுக்குரியவையாகக் கூறப்படுதலின் அமைச்சியல், அரணியல் கூழியல், படையியல், நட்பியல், குடியியல் என்பனவும் அரசன் அல்லது அரசுக்குரியதாகவே விளக்கம் பெறுவதால் கூடுதலான அதிகாரங்கள் காணப்படுவதை திருக்குறளில் அவதானிக்கலாம். பொதுவாக ஒரு சமூகத்தையும் அதன் பண்பாட்டினையும் பொருளாதார வளங்களையும் சமூகச் சீர்மையையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்குள்ளது. எனவே ஒரு சமுதாயத்திற்கு அரசு என்ற நிறுவனம் அவசியமான ஒன்றாகும். முடியாட்சி நிலவிய காலத்தில் ஆள்பவனை மன்னன் காவலன் என்று மட்டுமல்லாது அரசு என்ற பதத்தாலும் பண்டைய இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன. அதாவது அன்றைய காலத்தில் அரசனின்றி அரசு செயற்பட முடியாது என்பதால் அரசும் அரசனும் ஒரே கருத்தில் நோக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் அரசு பற்றிய நோக்கு தனித்துவமாக பேணப்பட்டு வந்துள்ளதைச் சான்றுகள் பலவும் எடுத்துக்காட்டுகின்றன. சங்க காலத்தில் அரசின் வளர்ச்சியானது ஐவகை நிலங்களினூடாக வளர்ச்சி நிலையைப் பெற்றிருந்தென ஆய்வாளர் குறிப்பிடுவர்.

வேள், கிழார், கோன் என்பன இவ்வாறு வளர்ச்சி பெற்ற சொற்களாகக் கருதப்படுகின்றன. உதாரணமாக தொறு பூசல் எனக்குறிப்பிடப்படும் ஆநிரைகளுக்கான சண்டையில் தலைமை தாங்கி நடத்திய வேள் காலகதியில் குலத்தின் தலைவனாக நிலை பெற்றான் (பூங்குன்றன்.ர.,தொல்குடி வேளிர் அரசியல், 133). கோன் என்பதும் அரசனைக் குறித்த சொற்களில் ஒன்றாகும். சங்ககாலத்திலேயே அச்சொல் பயன்பாட்டுக்குரியதாக இருந்துள்ளது. இடையர் குலத்தவரிடையே வளர்ச்சி பெற்ற தலைமைத்துவம் தொடர்பாக இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சொல்லின் வேர்ச் சொல்லாகிய கோ என்பதும் அரசனைச் சுட்டவே கையாளப்பட்டுள்ளது. கோ என்றால் அரசன், தலைவன், வேந்தன் என்ற கருத்தைத் தரும் (லீமீமீஜீ//ஹணீகூஷீறீ.நீஷீனீயீஷீ கூஷீஹ்னீ3/மீஷீஜீவீநீ/130). கீழே தரப்பட்டுள்ள ஔவையாரின் செய்யுள் விவசாயத்தோடு தொடர்புபடுத்தப்படுகின்றதாயினும், சங்ககாலத்திலேயே கோன் என்ற பதம் அரசனைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளதை நோக்கலாம்.

**"வரப்புயர நீருயரும் நீரருயரக் நெல்லுயரும்**
**நெல்லுயரக் குடியுயரும் குடியுயரக் கோலுயரும்**
**கோலுயரக் கோனுயர்வான்"**

இங்கு குடியின் உயர்வு கோனுடைய உயர்வுக்கு காரணமாக முன்வைக்கப்படுகின்றது. ஆனால் சங்க மருவிய காலத்தில் கோனே குடிகளுக்கு அவசியமான ஒருவனாக காட்டப்படுகின்றான். இதற்குச் சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றமே காரணமெனலாம். தமிழகத்தில் மேலான்மை பெற்ற அரசுகளாக சேர சோழ பாண்டிய அரசுகள் உருவாக்கம் பெற்றிருந்தபோதும் களப்பிரர் ஆட்சியில் அவை சீர்குலைந்திருந்தன. இத்தகைய வரலாற்றுப் பின்னணியில் அரசில்லாத குடிகள் பல்வேறு துன்பங்களை அனுபவித்தன. எனவே சமுதாயத்தைக் கட்டுப்படுத்தவும் அதனை பேணிச் செல்லவும் செங்கோன்மை அரசு தேவைப்பபட்டது. இத்தகைய சூழ்நிலையை திருக்குறள் மட்டுமல்ல சமகால நீதி நூல்களின் உள்ளடக்கமும் எடுத்துக்காட்டுகின்றது. அதனைச் செய்: அதனைச் செய்யாதே என்ற தொனியையே அவ்விலக்கியங்கள் கொண்டிருக்கின்றன. எனவே சமுதாயத்தைச் சரிசெய்யக்கூடிய ஒரு கருத்தாக்கத்தை

அரசியல் என்ற இயலில் வள்ளுவர் முன்வைக்கின்றார். அதிலும் செங்கோன்மை, கொடுங்கோன்மை என்ற அதிகாரங்களினூடாக சிறந்தவோர் அரசுக்கான அடித்தளத்தை கட்டமைக்க திருவள்ளுவர் முயன்றுள்ளார் எனக் கருதலாம்.

செங்கோன்மை என்பது ஆளுகைக்குரிய ஒரு திறனாகும். இச்சொல்லின் பதப்பிரிப்பினை நோக்கினால் செம்மை, கோல் என இரண்டாகக் காணலாம். செம்மை என்பது செவ்வை, சிவப்பு, நேர்மை, மனக்கோட்டமின்மை, ஒற்றுமை, பெருமை, தூய்மை, அழகு, எனப்பல கருத்தினைப் புலப்படுத்துகின்றது(ஸ்ணீற்ணீவீமீ ணீனீவீற். நீஷீனீ). செங்கோன்மையில் வள்ளுவர் நேர்மை, மனக்கோட்டமின்மை போன்ற கருத்திலேயே செம்மை என்பதைக் கையாண்டுள்ளார். இறைமாட்சியில் வேந்தனுக்கு ஒளியாகக் இருக்கக் கூடிய விடயங்களில் செங்கோலையும் குறிப்பிடுகின்றார் (குறள். 390). கொடை, அளி (அருள்), செங்கோல், குடியோம்பல் (மக்களைப் பாதுகாப்பது) என்ற நான்கு சிறப்புக்களில் செங்கோலையும் குறிப்பிடுவது கவனத்திற்குரியது. நீதியான ஆட்சியை மனத்தில் எந்தவிதமான மாறுபாடும் இல்லாமல் வழங்க வேண்டும். இத்தகைய ஆட்சி தமிழகத்தில் நிலவினால் மக்கள் மகிழ்ச்சியுடன் நிம்மதியுடன் வாழ்வார்கள். எனவேதான் ஒளிமிக்க ஆட்சியின் இலக்கணமாக செங்கோலையும் முன்வைக்கின்றார். கோல் என்பது சீர்மையான நேரான தன்மை கொண்டதெனவே பண்டைய இலக்கியங்கள் அறிவிக்கின்றன. எவ்வாறு ஆட்டு மந்தைகளை ஒருங்கு கூட்டிக் கட்டுப்பாடாக வைத்திருப்பதற்குத் கோலொன்று உதவுமோ அவ்வாறே மக்களை தன் கீழ் செம்மையான ஆட்சியின் கீழ்க் கட்டுப்படுத்த செங்கோல் பயன்படுத்தப்பட வேண்டும். பிரஜைகளை நல்லாட்சியின் கீழ் ஒருங்கிணைக்க வள்ளுவர் செங்கோன்மை என்ற அதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளார். அதாவது ஆட்சியாளன் செங்கோலாட்சியை வழங்க வேண்டும். செங்கோல் ஆட்சியின் ஒரு குறியீடாகவேதான் நவீனகாலப் பாராளுமன்ற நடவடிக்கையின்போது செங்கோலை முன்னிலைப்படுத்துவதைக் காணலாம். மேற்சொல்லிய செய்யுளில்; ~கோலுயரக் கோனுயர்வான்......" என்பதன் பொருளும் செம்மையான ஆட்சியையே குறிக்கின்றதெனலாம். எனவே திருக்குறள் குறிப்பிடும் செங்கோன்மை ஒருவகையில்

அரசனால் செய்யப்படும் முறையினது அல்லது நீதியினது சிறந்த தன்மையைச் சுட்டுவதாகக் கருத முடிகின்றது. அம்முறையானது ஒருபாட்கோடாது செவ்விய கோல் போன்றலின் செங்கோல் எனப்பட்டது.

கோன்மையோடு தொடர்புடைய இன்னொரு பதமாக முறைமை என்பதும் வள்ளுவரால் முன்வைக்கப்படுவது எடுத்துக்காட்டத்தக்கது. இறைமாட்சி பற்றிய அதிகாரத்தில் முறை என்பது மன்னது கடமைகளுள் பிரதானமானது என்பது 'முறை செய்து மக்களைக் காப்பாற்றுபவனே மக்களுக்கு இறை என்று கருதத்தக்கவன்" *(388)* என்ற கருத்து வலியுத்தப்படுகின்றது. இக்கருத்து பண்டைய இந்திய அரசியலில் முன்வைக்கப்பட்ட தெய்வீகக் கோட்பாட்டை மறுதலிப்பது போல அமைகின்றது. அரசனாக இருப்பவன் இறைவனுக்குச் சமானமாக கூறப்பட்ட நிலையில் வள்ளுவர் நீதியை சரியாக வழங்குபவனையே இறை என்று கருதத்தக்கவன் என்பதை நிலைநாட்டுவதை அவதானிக்கலாம். முறை தவறுவானாயின் அவன் கொடுங்கோல் செய்பவனாக கருதப்படுவான்.

முறை, செங்கோல், நீதி என்பதற்கான வள்ளுவரின் வரைவிலக்கணத்தை பின்வரும் குறளில் நோக்கலாம். 'ஓர்ந்து கண்ணோடாது இறை புரிந்து யார் மாட்டும் தேர்ந்து செய்வதே முறை" அரச நீதி என்பது மக்களைத் துயரங்களிலிருந்து காப்பது அல்லது நீதி வழுவாமையைக் குறித்தமையாலேயே அதனைக் கொற்றமென்றும் பண்டைத் தமிழர் சுட்டினர். வடநூலார் நீதியைத் தண்டம் எனவும், தண்டநீதி எனவும் குறிப்பிடுகின்றனர். எனவே ஆட்சியாளன் குற்றம் செய்வர்களுக்குத் தண்டனை வழங்குவதனூடாக மக்களைக் காக்கும் பொறுப்பினை உடையவனாகின்றான். இதனால் முறை என்பது அறத்துடன் மேற்கொள்ளப்படும் நீதியையே சுட்டுவதாக அமைகின்றதெனலாம். அதிலும் குற்றத்தின் தன்மையை அறிந்து பொருத்தமான தண்டனையை வழங்குவது கருத்திற் கொள்ளப்படுகின்றது. தொண்டைமான் இளந்திரையன், கதிரவன் கதிர்களைச் சொரிவது போலநீதி தவறாது முறையிரந்தாருக்கும் குறையிரந்தார்களுக்கும் வேண்டியவற்றை வேண்டிய அருள் செய்ததைப்

பெரும்பாணாற்றுப்படை (441 444) குறிப்பிடுகின்றது. ஈழத்தில் எல்லாளன் என்பவன் நீதியான ஆட்சியை மேற்கொண்டிருந்தான் என்பதை மகாவம்சம் குறிப்பிடுகின்றது. தன் மகன் என்றும் பாராது அவனுக்கு மரணத்தைத் தண்டணையாக வழங்கினான். இவ்வாறு நீதியை கண்ணோடாது அதாவது தன் மகன் என்றும் நோக்காது நடைமுறைப்படுத்தியமையால் 42 வருட நீண்ட கால ஆட்சியினை மக்களாதரவுடன் மேற்கொள்ள முடிந்தது. அதுமட்டுமன்றி இராச்சியத்தை விஸ்தரிக்கும் எண்ணத்துடன் போரிட்ட துட்டகாமணி என்னும் சிங்கள அரசன் எல்லாளனுக்காக நினைவுச்சின்னம் அமைத்து மரியாதை செய்தமை நீதியான ஆட்சிக்குக் கிடைத்த கௌரவமாகும். தன் மக்கள், தன் இனம், தன் சுற்றம் என நோக்கி நீதியை வழங்கினால் அது நீதியன்று: அவ்வாட்சியாளன் இறைவனாக மதிக்கத்தக்கவனுமல்ல என்பதை வள்ளுவர் உட்பொருளாகச் சுட்டிக்காட்டுகின்றார்.

கோன்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்த முற்படும் வள்ளுவர் இரண்டு குறட்பாட்கள் வாயிலாக அதனை எடுத்துக்காட்டுகின்றார். 'வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னன் கோல்நோக்கி வாழும் குடி" உயிர்கள் மழையை நம்பி வாழ்வது போலக் குடிகள் அரசனின் நேர்மையான ஆட்சியை நம்பி வாழ்கின்றன என்ற உவமையைக் காட்டுவதன் ஊடாக செங்கோன்மையை விளக்க முற்படுவதைக் காணலாம். அதாவது மன்னனுடைய நீதியான ஆட்சியை கருதியே மக்கள் நல்வாழ்வை மேற்கொள்கின்றனர். அது இல்லாவிடில் துன்பமே அவர்களது வாழ்வாகிவிடும் என்பது பெறப்படுகின்றது. மக்கள் விரும்பிய ஆட்சியை அல்லது நீதியை நிலைநாட்டுபவனை எப்பொழுதும் மக்கள் சார்ந்து நிற்பர். நீதியை மன்னன் சரியாக வழங்குவான் என்ற நம்பிக்கையில் மக்கள் அவனிடமே தஞ்சம் புகுவார் (குறள்.544). இல்லாவிட்டால் மக்கள் இன்னொரிடத்தில் அல்லது நீதியை வழங்கும் இன்னொரு மன்னனிடம் அடைக்கலம் தேடுவர். தற்காலத்தில் நாட்டில் நீதி கிடைக்கவில்லை அல்லது வாழ முடியவில்லை என்றால் அயல்நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து வாழ்வதைக் காண்கின்றோம். மழை கிடைத்தால் உயிர்கள் வாழ்வது போல நேர்மையான ஆட்சியை ஆட்சியாளன் மேற்கொள்கின்றபோது மக்களும் மன்னனுடைய நல்லாட்சியால் வாழ்க்கையில் மகிழ்ச்சியடைவார்கள் என்பது இங்கு உணர்த்தப்படுவதைக் காணலாம்.

செங்கோன்மை என்ற நீதி வழுவாத ஆட்சியின் நன்மை என்ன என்பதற்கு வள்ளுவர் தரும் விளக்கம் விரிவுபட்டதாகும். அரசனுடைய நீதியே அறவோருடைய நூல்கள் நிலைபெறுவதற்கும் அறம் நிலைத்து நிற்பதற்கும் காரணம் என்பது சுட்டப்படுகின்றது (குறள்543). அறமே திருக்குறள் எழுந்த காலத்தில் முதன்மைப்படுத்தப்பட்டது. அறமுதற்றே அரசின் கொற்றம் என்பது பண்டைத் தமிழகத்தின் கருத்தாக்கமாக இருந்தது. நீதியான அரசாட்சியினால் அறம் என்பது நிலைபேறுடையதாகும். அறம் அல்லது தர்மம் எல்லாவற்றுக்குமே அடிப்படையென்பதால் துன்பத்திற்கு இடமிருக்காது. சங்கமருவிய காலத்துப் பாடுபொருளும் திருக்குறளின் முதற் பொருளுமாகிய அறம் என்பது செங்கோன்மையாலேயே நடைமுறைப் படுத்தத்தக்கதென்பது எடுத்துக்காட்டப்படுகின்றது(குறள்544). பிறிதொரு குறளும் (குறள்545) ஒரு அரசனுக்குரிய இயல்போடு செங்கோல் செலுத்தும்போது பருவமழை பொய்க்காது அதனால் விளைச்சல் பெருகும் எனக் கூறுகின்றது. பண்டைய அரசியலில் ஆட்சியாளன் நீதியான ஆட்சியை மேற்கொண்டால் பருவம் தப்பாது வருடம் மும்மாரி பொழியும் என்பதற்கு எடுத்துகாட்டாக எல்லாளன் கதையை நோக்கலாம். முதியவள் ஒருத்தி வெய்யில் காலத்தின்போது நெல்லை வெய்யிலில் பரப்பியிருந்தாள். ஆனால் மழை பெய்தமையால் மூதாட்டியின் நெல் நனைந்துவிட்டது. மன்னனிடம்; சென்று முறையிட்டாள். மன்னன் வருணனிடம் வாரத்திற்கு ஒருதடவை மட்டும் மழையைத் தரவேண்டும் என வேண்டியதாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. வள்ளுவர் கருத்தினை நோக்கின் மன்னன் செங்கோலாட்சியை நடத்தினால் இயற்கையும் ஒழுங்கின் பிகாரம் செயற்படும்: இறைவனும் செங்கோலாட்சிக்கு தலைவணங்கும் நிலையேற்படும் என்பதை விளக்குவதைக் காணலாம்.

மக்களை அணைத்துச் செல்லும் நீதியான ஆட்சியை நிலைநாட்டும் ஆட்சியாளனுக்கே மக்கள் பணிந்து நடப்பதோடு ஆதரவும் வழங்குவார்கள். இல்லாவிடின் புரட்சி ஏற்படும்; அல்லது மக்கள் எதிரி நாட்டு அரசனுக்கு ஆதரவாளராகி விடுவர் என்பது மறைமுகத்தால் சுட்டப்படுகின்றது. 'வேலன்று வென்றி தருவது மன்னவன் கோலதூங் கோடா தெனின்" என்ற குறள் (546) சங்ககால வாழ்வினைப் படம்பிடித்துக் காட்டுகின்றது. சங்க காலத்தில் வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லரது

பிரதான கடமையென்பது புறநானூற்றால் தெரியவரும். போர் என்பது முதன்மை பெற்றிருந்தமையால் அக்கால சமூக வாழ்வு சீரழிந்து போனதை நினைவிற் கொண்டே வேலுக்குப் பதிலாக செங்கோல் தவறாத ஆட்சியை வலியுறுத்துகின்றார். ஒருவனுக்கு வெற்றி பெற்றுத்தருவது வேலன்று அரசனுடைய செங்கோலே: அச்செங்கோலும் வளையாதிருக்க வேண்டும். வேல் வீழ்த்தும்: ஆனால் செங்கோல் வாழவைக்கும் என்பது மேற்படி குறளினூடாக முன்வைக்கப்படுகின்றது. பிறிதொரு குறள் (544) முடியாட்சியைப் போற்றுவது போல தென்படினும் 'குடிதழீஇக் கோலோச்சும்" எனக்கூறுவதன் வாயிலாக வள்ளுவர் குடிமக்கள் தழுவிய ஆட்சிமுறையையே செங்கோலாட்சி மூலம் முதன்மைப்படுத்துகின்றார் இவ்வாறான ஆட்சியையே மக்கள் நாடிச் செல்வர். 'அடிதழீ நிற்கும்...." என்ற தொடர் காலடியில் தஞ் சடையும் என்னும் ஆழ்ந்த பொருளில் வருவதை நோக்கலாம். 547,548 வது குறள்களை நோக்கின் பாவம், புண்ணியம் போன்றவற்றில் வள்ளுவர் கொண்டிருந்த நம்பிக்கையை எடுத்துக்காட்டுகின்றன. நன்மை செய்தால் நன்மை விளையும்: தீமை செய்தால் தீமைவிளையும் என்பது பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் நம்பிக்கை. இந்நம்பிக்கையை அரசியலில் செங்கோன்மையின் சிறப்பை வலியுறுத்தவதற்காக எடுத்து விளக்குவது சிறப்பாகும். 'இறைகாக்கும் வையமெல்லாம் அவனை முறை காக்கும் முட்டாச் செய்யின்" நீதியினால் நாட்டைக் காக்கும் பணியில் இருக்கும் ஆட்சியாளன் அதனைச் சரியாக நிலைநாட்டுவானாயின் அவன் துன்புறும்போது அது அவனைக் காக்கும். அதைப்போல நீதி வழங்குவதால் பிறழ்வானாயின் அவனை அச்செயலே அழித்துவிடும் என்பதனை 'எண்பதத்தான் ஓரா முறை செய்யா மன்னவன் தண்பதத்தான் தானே கெடும்" எனக் குறிப்பிடுகின்றார். இவ்விரு குறள்களும் முறையே நீதியினால் வரும் நன்மையையும் அதிலிருந்து தவறும்போது ஏற்படும் தீமையினையும் கூறுகின்றன. இக்கருத்தினை சமகால நூலாகிய ஏலாதி, 'செங்கோலான், கீழ்க் குடிகள் செல்வமும் சீர்இலா வெங் கோலான், கீழ்க்குடிகள் வீழ்ந்து உகவும் (ஏலாதி10) எனக் குறிப்பிடுகின்றது.

தன் இராச்சியத்தில் வாழும் மக்களைக் காத்து குற்றம் செய்பவருக்குத் தக்க தண்டனை வழங்குவது பழியல்ல: இதுவே

அரசனுடைய தொழிலாகும். ஏனெனில் சமூகமொன்றில் சிலர் சட்டத்தையோ விதிகளையோ பின்பற்றாவிட்டால் அல்லது கீழ்படியாவிட்டால் ஒழுங்கு முறை சீர்கெட்டுவிடும். சமூகம் எதற்கும் அச்சமடையாதவாறு தடுப்பது வேந்தனின் தொழில். முத்தாய்ப்பாய் கூறும் குறளை நோக்கின் சமூகம் என்ற பயிரைக் காக்க வேண்டுமாயின் கொடியவர்கள் ஆகிய களையைக் களைய வேண்டும். இல்லாவிடில் களைகள் மெதுவாகப் பயிர்கள் முழுவதையுமே அழித்து விடும். ஆதலால் உரிய காலத்தில் களையாகிய தீயவர்களை நீதி என்ற செங்கோன்மையால் பாதுகாத்து தன் கீழ் இயங்கிவரும் சமூகத்திற்குப் பாதுகாவலனாக அரசன் இருக்க வேண்டும் என்பது விளங்கவைக்கப்படுகின்றது. செங்கோன்மை என்ற அதிகாரத்தில் நீதியின் பல்வேறு தன்மைகளை எடுத்துக்காட்டும் வள்ளுவர் அடுத்து வரும் அதிகாரமாகிய கொடுங்கோன்மையில் அரசன் எவ்வாறிருக்க் கூடாது என்பதை விளக்குவதன் வாயிலாக செங்கோலின் அவசியத்தை எடுத்துக்காட்டுகின்றார். செங்கோன்மை என்பதன் வாயிலாக நேர்படவும், கொடுங்கோன்மை, வெருவந்த செய்யாமை என்பவற்றில் எதிர்படவும் கூறுவதன் நோக்கம் செங்கோன்மையின் சிறப்பை உணர்த்துவதற்காகவே. பிற்கூறிய இரு அதிகாரங்களும் கொடுங்கோன்மையின் தீமைகளையும் தன்மைகளையும் விளக்குகின்றன. சமகால அறநூலாகிய இன்னா நாற்பது என்ற நூல் கொடுங்கோல் மற மன்னர் கீழ் வாழ்தல் இன்னா (இன்னா..3) எனக் குறிப்பிடுகின்றது. எனவே திருக்குறள் கோன்மை என்பதன் செம்பொருளை வெளிப்படுத்தும் நூல் என்பது விளக்கம் பெறுகின்றது.

**உசாத்துணை:**


1. பூங்குன்றன்.ர., *(2016)*, தொல்குடி வேளிர் அரசியல், heritage Treasure Publishers, chennai.
2. சிதம்பரனார்.சாமி., *(2000)*, வள்ளுவர் வாழ்ந்த தமிழகம், பாவை பப்பிளிகேஷன் வெளியீடு, சென்னை.
3. சாமிநாதசர்மா.வெ., *(2003)*, புராதன இந்தியாவில் அரசியல், சந்தியா பதிப்பகம், சென்னை.